RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 47 பிப்ரவரி.23 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# “அதிமுகவை பாஜகவுக்கு விற்று விட்டார் பழனிசாமி” கோவையில் உதயநிதி பேச்சு

கோவை: பிப்.23-

“பழனிசாமி 2019ல் அதிமுகவை பாஜகவுக்கு அடகு வைத்தார். 2021ல் அதிமுகவை பாஜகவுக்கு லீசுக்கு விட்டார். 2026ல் அதிமுகவை பாஜகவுக்கு விற்று விட்டார் என கோவை மேற்கு மண்டல மாநாட்டில் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

திமுக மேற்கு மண்டல இளைஞரணி மாநாடு, கோவை மாவட்டம் கருமத்தம்பட்டியை அடுத்த கணியூர் சுங்கச்சாவடி அருகே இன்று (பிப்.22) மாலை நடைபெற்றது.

இம்மாநாட்டுக்கு திமுக இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து பேசியதாவது: “இம்மாநாட்டில் 16 கழக மாவட்டங்கள், 39 தொகுதிகளைச் சேர்ந்த 80 ஆயிரம் இளைஞரணி நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர். உங்கள் எழுச்சியை பார்க்கும் போது, ‘வெஸ்ட்டில் திமுக பெஸ்ட்’ என இக்கூட்டம் நிரூபித்துக் காட்டும். முதல்வரின் ஆட்சி, அரசியல் நாட்டுக்கே வழிகாட்டுகிறது. நாட்டில் பாஜகவுக்கு எதிரான போரில், நம் தலைவரை தலைமை ஏற்க மற்ற மாநில தலைவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆட்சியை பொறுத்தவரை ஏராளமான திட்டங்களை தந்துள்ளார்.

குறிப்பாக, 1.31 கோடி மகளிருக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1000 வழங்கப்படுகிறது. இந்த மாதம் முதல்வர் மகளிர் உரிமைத் தொகையாக, கோடைக்கால சிறப்புத் தொகை சேர்த்து ரூ.5 ஆயிரம் வழங்கி மகளிருக்கு சர்ப்ரைஸ் கொடுத்துள்ளார். அடிமைகளுக்கு மிகப்பெரிய ஷாக் கொடுத்துள்ளார். பிரதமர் மோடி அடிக்கடி டிவியில் தோன்றுவார்.

ஒருமுறை கரோனா காரணம் காட்டி ஊரடங்கு பிறப்பித்தார். 2016ல் ரூ.500, ரூ.1000 பணத்தாள்களை மதிப்பிழந்ததாக அறிவித்தார். பிரதமர் மோடி எப்பொழுது டிவியில் தோன்றினாலும், மக்கள் பயத்துக்குச் சென்று விடுவர். முதல்வர் ஸ்டாலின்



டிவியில் தோன்றினால் மக்கள் மகிழ்ச்சியாக பார்க்கின்றர். பல்வேறு திட்டங்களை முதல்வர் செயல்படுத்துவதால், தமிழகம் 11.19 சதவீதம் வளர்ச்சி பெற்று நாட்டிலேயே தலைசிறந்த மாநிலமாக உள்ளது.

புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து, தமிழகத்தில் இந்தி சமஸ்கிருதத்தை நுழைக்கப் பார்க்கின்றனர். தேர்தல் வருவதால், பிரதமர் மோடி, அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தமிழகத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கியுள்ளனர். அவர்கள் வருவார்கள். ஆனால், எந்த நிதியும் வராது, எந்த திட்டமும் வராது. பிரதமர் மோடிக்கு முரட்டு அடிமையாக பழனிசாமி மாறியுள்ளார். எம்.ஜி.ஆர் இன்றைக்கு உயிரோடு இருந்தால், என் கட்சியை இப்படி ஆக்கிவிட்டாயே என பழனிசாமியை நினைத்து அழுதிருப்பார்.

பழனிசாமி 2019ல் அதிமுகவை பாஜகவுக்கு அடகு வைத்தார். 2021ல் அதிமுகவை பாஜகவுக்கு லீசுக்கு விட்டார். 2026ல் அதிமுகவை பாஜகவுக்கு விற்று விட்டார். தன் சுயநலத்தால் பழனிசாமி, அதிமுகவை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்கிறார். ஆனால், முதல்வர் ஸ்டாலின் தமிழ்நாட்டை அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கிறார். நாங்கள் ஈ.டிக்கும் பயப்பட மாட்டோம், மோடிக்கும் பயன்பட மாட்டோம். ஏன், மோடியின் டாடிக்கும் பயப்பட மாட்டோம்.

ஜாடிக்கு ஏற்ற மூடி போல், மோடிக்கு ஏற்ற அடிமையாக பழனிசாமி உள்ளார். மக்களை தொந்தரவு செய்து, வெறுப்பை பரப்புவது பாஜகவின் நோக்கம். ஒவ்வொரு மாநிலத்திலும் வெறுப்பு அரசியலை பரப்புகின்றனர். முதல்வர் இருக்கும் வரை பாஜகவின் கலவர அரசியலை தமிழ்நாட்டுக்குள் நுழைய மக்கள் விடமாட்டார்கள். தற்போது நடக்க உள்ளது 8 கோடி மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் போராகும்.

தமிழகத்தை சீரழிக்க பாசிச, அடிமைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வருகின்றனர். அதை தடுக்கும் பொறுப்பு இளைஞரணிக்கு உள்ளது. இளைஞரணியினர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று கழக கொள்கைகள், அரசின் திட்டங்களை எடுத்துக் கூறுங்கள். இந்த தேர்தல் தமிழ்நாட்டுக்கும், டெல்லிக்கும் இடையே நடக்கும் ஜனநாயகப் போர். இந்த போரில், தமிழ்நாடு நிச்சயம் வென்று காட்டும்.

சிலர் நம் இயக்கத்தை அழித்துவிடலாம் என பகல் கனவு காண்கின்றனர். நம்மை யாராலும் அழிக்க முடியாது. வெல்வோம் 200, படைப்போம் வரலாறு என தலைவர் டார்க்கெட் கொடுத்துள்ளார். அடுத்த 50 நாட்களுக்கு இளைஞரணியின் களத்தில் இறங்கி பிரச்சாரம் செய்தால், 200க்கும் அதிகமான தொகுதிகளில் திமுக, மதச்சார்பற்ற கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெறும்” இவ்வாறு உதயநிதி பேசினார்.

முன்னதாக, மண்டல பொறுப்பாளர் செந்தில் பாலாஜி வரவேற்றார். அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அந்தியூர் செல்வராஜ் எம்.பி ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். பிரகாஷ் எம்.பி நன்றி கூறினார்.

## செங்கோட்டையில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்: உளவுத் துறை எச்சரிக்கை

புதுடெல்லி, பிப்.23-

டெல்லி செங்கோட்டை, முக்கிய வழிபாட்டுத் தலங்களில் தாக்குதல் நடத்த லஷ்கர் தீவிரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெல்லி செங்கோட்டை, சாந்தினி சவுக்கில் ஒரு கோயில் உட்பட நாடு முழுவதும் முக்கிய வழிபாட்டுத் தலங்களிலும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் தீவிரவாத அமைப்பு, தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதையடுத்து, டெல்லி செங்கோட்டை, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், நாடு முழுவதும் உள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.



கடந்த பிப்ரவரி 6ம் தேதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் மசூதி ஒன்றில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர். இதக்கு ஐஎஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது. எனினும், இந்தத் தாக்குதலுக்கு பழிவாங்கும் நோக்கில் லஷ்கர் இதொய்பா அமைப்பு இந்தியாவில் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2025, நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். மேலும் சுமார் 24 பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பான வழக்கை என்ஐஏ விசாரித்து வருகிறது. டிஎன்ஏ பரிசோதனை முடிவுகளின்படி, ஃபரிதாபாத்தில் உள்ள அல்ஃபலா பல்கலைக்கழக மருத்துவர் உமர் முகமது என்பவர் அந்தக் காரை ஓட்டிச் சென்றதும் அவர் உயிரிழந்ததும் உறுதி செய்யப்பட்டது.

## காப்பி அடித்ததை கண்டித்த பேராசிரியரை தாக்கிய கல்லூரி மாணவர்: கர்நாடகாவில் அதிர்ச்சி சம்பவம்

பெங்களூரு, பிப்.23-

கர்நாடக மாநிலம் கலபுர்கி மாவட்டத்தில் உள்ள குவெம்பு நகரில் டாக்டர் மலகாரெட்டி ஹோமியோபதி கல்லூரி உள்ளது. அங்கு நேற்று முன்தினம் மூன்றாம் பருவ ஹோமியோபதி தேர்வு நடைபெற்றது. தேர்வு மையத்தில் ஷ்ஃபாஸ் கான் என்ற மாணவர் செல்போனை மறைத்து வைத்து காப்பி அடித்ததை கண்காணிப்பு பணியில் இருந்த பேராசிரியர் சிவராஜ் கண்டுபிடித்தார்.

உடனடியாக அவரது விடைத்தாளை வாங்கிய சிவராஜ், தேர்வு மையத்தில் இருந்து வெளியே செல்லுமாறு கூறினார். இதனால் கோபமடைந்த ஷ்ஃபாஸ் கான், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரை முகத்தில் கடுமையாக தாக்கினார். அங்கிருந்த மற்ற மாணவர்கள் உடனடியாக ஷ்ஃபாஸ் கானை பிடித்து வெளியே கொண்டு சென்றனர்.

தேர்வு மையத்தில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பேராசிரியரை தாக்கிய மாணவர் ஷ்ஃபாஸ் கான் கேரள மாநிலத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

உடனடியாக இந்த சம்பவம் குறித்து அவரது பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டு, கல்லூரியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். அடுத்தடுத்த தேர்வுகளை எழுதவும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பேராசிரியர் சிவராஜ் போலீஸில் புகார் அளிக்க முன்வரவில்லை என தெரிகிறது. எனவே கல்லூரி நிர்வாகம் சார்பில் மாணவர் மீது நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

## போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற 4,010 பேருக்கு பணி நியமன ஆணை வழங்க மறுப்பது நியாயமல்ல: அன்புமணி

சென்னை, பிப்.23-

சுகாதார ஆய்வாளர்கள், கூட்டுறவு உதவியாளர் பணிக்கான போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற 4,010 பேருக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என தமிழக அரசை பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாடு அரசின் மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் சார்பில் 1429 சுகாதார ஆய்வாளர்களை தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டித் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டு, சான்றிதழ் சரிபார்ப்பும் முடிவடைந்து விட்ட நிலையில், இன்று வரை அவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. பல ஆண்டு காத்திருப்புக்கு பின்னர் அரசு வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் கூட அவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்க மறுப்பது நியாயமல்ல.



தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறைக்கு 1429 சுகாதார ஆய்வாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிக்கை கடந்த ஆண்டு அக்டோபர் 27ம் தேதி வெளியிடப்பட்டு, அதனடிப்படையில் விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த டிசம்பர் 7ம் தேதி போட்டித் தேர்வு நடத்தப்பட்டு, அடுத்த சில வாரங்களில் முடிவுகள் வெளியிடப்பட்டன. அவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்து கடந்த 13ம் தேதி பணி நியமன ஆணை வழங்கப்படவிருந்த நிலையில், கடைசி நேரத்தில் அது கைவிடப்பட்டது.

இதற்குக் காரணம் சுகாதார ஆய்வாளர் பணிக்கான போட்டித் தேர்வில் முறைகேடு நடந்ததாகக் கூறி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள்தான் என்று கூறப்பட்டது. ஆனாலும், விசாரணையில் அது உண்மையில்லை என்று தெரியவந்ததையடுத்து அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது. ஆனால், இதற்கு முன்பு நடந்த தேர்வில் தேர்ச்சி பெற்றும் பணி கிடைக்காமல் தற்போது தொகுப்பூதியத்தில் பணிபுரிபவர்கள், தங்களுக்கு பணி நியமனம் வழங்க வேண்டும் என புதிய வழக்கு தொடர்திருப்பதால் நியமன ஆணை வழங்க உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அதேபோல், கூட்டுறவுத் துறையில் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் 2581 பேரை தேர்ந்தெடுப்பதற்கான போட்டித் தேர்வுகள் கடந்த அக்டோபர் 5, 11 ஆகிய தேதிகளிலும், சான்றிதழ் சரிபார்ப்பு நவம்பர் 15, 21 ஆகிய தேதிகளிலும் நடத்தி முடிக்கப்பட்ட நிலையில், அந்தப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல் இதுவரை வெளியிடப்படவில்லை. அதற்கும் நீதிமன்ற வழக்குகள்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

சுகாதார ஆய்வாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் ஏற்கனவே கரோனா காலத்திற்கு சுகாதார ஆய்வாளர்களாக தற்காலிகமாக பணியாற்றி, அதன் பின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் தற்காலிகமாக பணியாற்றி வருபவர்கள் ஆவர். தமிழ்நாட்டில் பத்தாண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் சுகாதார ஆய்வாளர்களை நிரந்தரமாக நியமிப்பதற்கான ஆள் தேர்வு நடைபெறுவதால் அதை வராது வந்த வாய்ப்பாக அவர்கள் கருதுகின்றனர். அந்த வாய்ப்பை அவர்களிடமிருந்து பறித்து விடக்கூடாது.

அதேபோல், கூட்டுறவுத்துறை பணிக்கான தேர்வு எழுதியவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் பல ஆண்டுகளாக இந்தப் பணிக்கு காத்திருப்பவர்கள் ஆவர். அடுத்த சில நாள்களுக்குள் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படவுள்ள நிலையில், அறிவிக்கை வெளியானால், இந்த நியமனங்களை செய்ய முடியாமல் போய்விடும். எனவே, நீதிமன்ற வழக்குகளை காரணம் காட்டி அவர்களுக்கு கைக்குக் கிடைத்ததை வாய்க்கு கிடைக்காமல் செய்து விடக் கூடாது.

தமிழக அரசு உடனடியாக சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி சுகாதார ஆய்வாளர்கள், கூட்டுறவுத் துறை உதவியாளர்கள் பணிக்கு தகுதியானவர்களை நியமிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும். 1429 சுகாதார ஆய்வாளர்கள், 2581 கூட்டுறவுத்துறை உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் என 4,010 பேருக்கும் உடனடியாக பணி நியமன ஆணைகளை அரசு வழங்க வேண்டும். இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## மேலாடையை களைந்து போராட்டம்: 4 பேருக்கு 5 நாள் போலீஸ் காவல்

புதுடெல்லி, பிப்.23-

டெல்லி ஏஐ மாநாட்டில் மேலாடையை களைந்து போராட்டம் நடத்திய இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் 4 பேரை 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. ஏஐ மாநாட்டு அரங்கில் பிரதமர் மோடி மற்றும் அமெரிக்க வர்த்தக உடன்பாட்டுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரும் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். சர்வதேச அளவில் நாட்டை அவமதிக்கும் ஆழமான சதி உள்ளதால் அவர்களை விசாரிக்க 5 நாட்கள் அனுமதிக்க வேண்டும் என்று போலீஸார் கோரினர். அதை ஏற்ற நீதிமன்றம் 4 பேரையும் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.






## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் வீடு வீடாக சென்று வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரையை மகளிர் படை மேற்கொள்ளும் பயிற்சி கூட்டம்

செங்கல்பட்டு, பிப்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் வீடு வீடாக சென்று வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரையை மகளிர் படை மேற்கொள்ளும் பயிற்சி கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள், கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி, 5வது மண்டல குழுத்தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர், எஸ்.இந்திரன், 4வது மண்டல குழுத்தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், தலைமை கழக பேச்சா ளர்கள் கி.வேல்மணி, ஜி.கருணாகர பாண்டியன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ஆர்.எஸ். கிருத்திகா தேவி, தாம்பரம் மாநகர மகளிரணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம், தாம்பரம் மாநகர மகளிர் தொண்டரணி அமைப்பாளர் த.பூங்கோதை, மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, கிளை கழக மகளிரணி நிர்வாகிகள், BDA, வாக்குச்சாவடி ஒருங்கிணைபாளர்கள், அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

இறுதியில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது

## திருத்தணி அருகே கோர விபத்து: பேருந்து பைக் மோதியதில் இரு இளைஞர்கள் துடிதுடிக்க பலி




திருத்தணி, பிப்.23-

திருத்தணி அருகே சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் தனியார் பேருந்து மோதிய விபத்தில், இருசக்கர வாகனத்தில் வந்த அரக்கோணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தில் இருந்து தனியார் நிறுவனப் பேருந்து ஒன்று இன்று சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் பொன்பாடி அருகே வந்து கொண்டிருந்தது. அப்போது, ஆந்திர மாநிலத்திலிருந்து திருத்தணி நோக்கி வந்த இருசக்கர வாகனம் எதிர்பாராத விதமாகப் பேருந்தின் மீது நேருக்கு நேர் மோதியது.

இந்தக் கோர விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு இளைஞர்களுக்கும் பலத்த தலைக்காயம் ஏற்பட்டு, ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். விபத்து நடந்தவுடன் பேருந்து ஓட்டுநர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருத்தணி போலீசார், பலியானவர்களின் உடல்களைக் கைப்பற்றிப் பிரேதப் பரிசோதனைக்காக திருத்தணி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்துக்குள்ளான இருசக்கர வாகனத்தில் எண்குறித்த பலகை (Number Plate) இல்லாததால், அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து, இளைஞர்களிடம் இருந்த செல்போன்களைக் கைப்பற்றி போலீசார் விசாரணை நடத்தினர். அதில் கிடைத்த தகவலின்படி உயிரிழந்தவர்கள்:

யுவகேஸ் (எ) அப்பு (22) அரக்கோணம் அருகே உள்ள பாடி பகுதியைச் சேர்ந்தவர் (பால் வண்டி லோடுமேன்). விஜய் (22) அரக்கோணம் பகுதியைச் சேர்ந்தவர் (பெயிண்டர்).

இவர்கள் இருவரும் நண்பர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலையில் நடந்த இந்த விபத்தால் அப்பகுதியில் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாகக் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. போலீசார் போக்குவரத்தைச் சீர் செய்த பின் வாகனங்கள் வழக்கம் போல் இயங்கின.

தப்பியோடிய தனியார் பேருந்து ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு செய்துள்ள திருத்தணி போலீசார், அவரைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## நாம் வாழும் சமுதாயத்திற்கு நம்மாள் முடிந்த நற்பணிகளை செய்ய வேண்டும்: சித்தையன்கோட்டை சேரன் குளோபல் மெட்ரிக்குலேசன் பள்ளியின் 12வது ஆண்டுவிழாவில் பள்ளி தாளாளர் என்.திலகம் பேச்சு




ஆத்தூர், பிப்.23-

திண்டுக்கல் மாவட்டம், சித்தையங்கோட்டை சேடபட்டி சேரன் குளோபல் மெட்ரிக் பள்ளியின் 12 வது ஆண்டு விழா வெகு சிறப்பாக நடை பெற்றது. விழாவிற்கு தலைமை நிர்வாகி கே.ஏ.ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் மீனாட்சி சுந்தரம், சிவக்குமார். செல்வகுமார். சோபா, எஸ்.ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி முதல்வர் ஏ.மகாலெட்சுமி வரவேற்று பேசினார். துணை முதல்வர் என்.சரண்யா ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில் பள்ளி தாளாளர் என்.திலகம் மாணவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் பேசும்போது இந்த சமுதாயம் நமக்கு நல்லதொரு வாழ்வினை கொடுத்துள்ளது. நாம் நம்மை வளர்த்த சமுதாய த்திற்கு நம்மால் முடிந்த நற்பணிகளை செய்யவேண்டும் என்றார். சேரன் குளோபல் பள்ளியை பொறுத்தவரை மாண வர்களுக்கு கல்வியுடன் நற்பண்பு களையும் கற்றுத்தருவதால் எங்கள் பள்ளி மாணவர்க ளுக்கு எந்த இடத்திற்கு சென்றாலும் தனித்தன்மையுடன் இருப்பார்கள் என்றார். தலைமை நிர்வாகி இராதாகிருஷ்ணன் பேசும்போது இப்பகுதியில் சேரன் குளோபல் பள்ளியை ஆரம்பித்து படிப்படியாக உயர்த்தி மெட்ரிக் பள்ளியாக தரம் உயர்த்தினோம். இப்போது பள்ளி மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஒரு நற்செய்தியை சொல்கிறோம். விரைவில் சேரன் குளோபல் பள்ளி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயரும் என்றார். அப்போது விழாவிற்கு வந்திருந்த பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அவரைத் தொடர்ந்து பேசிய தன்னம்பிக்கை பேச்சாளர் ஐ.ஜெகன் இருதயகுமார் பேசும்போது, இப்பகுதியில் சிறந்த பள்ளியாக சேரன் குளோபல் பள்ளி பெற்றோர்கள் மத்தியில் இடம்பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. இப்பள்ளி தொடர்ந்து மென்மேலும் பல சாதனைகளை படைக்க வேண்டும் என்றார். தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பள்ளியில் முதலிடம் பிடித்த மாணவ, மாணவியருக்கும் கலை நிகழ்ச்சியில் பங்கேற்றவ ர்களுக்கும். பள்ளி நிர்வா கிகள் பரிசுகளை வழங்கி னார்கள். நிகழ்ச்சியில் பள்ளி மேலாளர் ஓ.பி.பாரதிராஜா, உடற்கல்வி ஆசிரியர்கள் அசோக்குமார், நாகராஜ், திவாகர், பள்ளி அலுவலக பணியாளர்கள் ஜோலின், ரூபி, வினிதா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





■ புதுக்கோட்டை டவுன் வடக்கு 4ம் வீதி செல்லப்பாநகர் இளைஞர்களால், திருவப்பூர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் பூச்சொரிதல் விழாவை முன்னிட்ட நடைபெற்ற அன்னதான நிகழ்வினை, புதுக்கோட்டை(வ) மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் டாக்டர் RV.பழனிவேல் அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார்.

## தளி அள்ளி கோவிலூரில் 29 ஆண்டுகளுக்கு பிறகு ஸ்ரீ திரௌபதி அம்மன் மகாபாரதம் நிகழ்ச்சி

காவேரிப்பட்டணம், பிப்.23-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் ஒன்றியம், தளி அள்ளிஊராட்சி கோவிலூர் கிராமத்தில் ஸ்ரீதிரௌபதி அம்மன் மகாபாரதம் பதினெட்டாம் நாள் போர்க்களம் நிகழ்ச்சியில் பிக்கிலி ஊராட்சி தண்டுகாரன அள்ளி தியாகி சுப்பிரமணிய சிவா நாடக குழுவின் சார்பில் துரியோதனன் படுகளம் நாடகம் அ.தி.மு.க ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் ஒருங்கிை ணப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சுதாபிரேம்குமார், திருவரசன், சுப்பிரமணி ,முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சுரேஷ் மற்றும் வாத்தியார் பலராமன், சின்ராஜ் சுகுமார் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜா, தொழிலதிபர் தர்மன் உள்ளிட்ட ஊர் கவுண்டர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் மற்றும் நீர் மோர் வழங்கப்பட்டது.துரியோதனன் படுகளத்தை முன்னிட்டு அ.தி.மு.க ஒன்றிய இளைஞர்பாசறை செயலாளர் மணிகண்டன் ஏற்பாட்டில் வான வேடிக்கை நிகழ்த்தப்பட்டது



## பழனிக் கோயில் சார்பில் மூத்த தம்பதியருக்கு மரியாதை செய்யும் நிகழ்வு நடைபெற்றது

பழனி, பிப்.23-

தமிழக இந்து சமய அறநிலையத்துறை தமிழகத்தில் உள்ள கோயில்களில் மூத்த தம்பதியர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மரியாதை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இன்று பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக அருள்மிகு பட்டத்து விநாயகர் கோயில் திருமண மண்டபத்தில் 35 ஜோடி மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பழனிக் கோயில் இணை ஆணையர் மாரிமுத்து தலைமை வகித்தார். துணை ஆணையர் வெங்கடேஷ் முன்னிலை வகித்தார். மூத்த தம்பதியருக்கு மலர் மாலை அணிவித்து, வேட்டி, சட்டை, சேலை, வளையல், பழ வகைகள், மங்கல பொருட்கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து அனைவருக்கும் அட்சதை வழங்கப்பட்டது. பின்னர் மேளதாளம் முழங்க வந்திருந்த மூத்த தம்பதியரது வாரிசுகள், திருக்கோயில் அதிகாரிகள் பொதுமக்கள் என அனைவரும் மூத்த தம்பதியரிடம் ஆசி பெற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியில் கண்காணிப்பாளர் அழகர்சாமி, மேலாளர் உமா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புளி விளைச்சல் அதிகரிப்பு - உரிய விலை, குளிர் பதனக் கிடங்கு அமைக்க விவசாயிகள் கோரிக்கை



கிருஷ்ணகிரி, பிப்.23-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேன்கனிக் கோட்டை, தளி, ஊரிக்கம், ராயக்கோட்டை, கெலமங்கலம், ஆலப்பட்டி, வேப்பநல்லி, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, பர்கூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் புளி (குழு) விளைச்சல் அதிக அளவில் காணப் படுகிறது. மாவட்டத்தின் முக்கிய வணிகப் பயிர்களுள் ஒன்றாக புளி விளங்குவதால், இதனை நம்பி ஆயிரக்கணக்கான விவசாயிகள் வாழ்வாதாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆண்டுக்கான புளி சீசன் தற்போது தொடங்கியுள்ள நிலையில், மழை சாதகமாக அமைந்ததன் காரணமாக புளி மரங்களில் காய் பிடிப்பு அதிகமாக காணப்படுவதுடன், மகசூலும் கணிசமாக அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ள போதிலும், சந்தையில் உரிய விலை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பும், கவலையும் ஒரே நேரத்தில் நிலவி வருகிறது.


புளி உற்பத்தி அதிகமாக இருக்கும் ஆண்டுகளில் இடைத்தரகர்கள் ஆதிக்கம் காரணமாக விவசாயிகளுக்கு போதிய விலை கிடைப்பதில்லை என்றும், விளைச்சல் அதிகரித்தாலும் லாபம் குறைவதாக இருப்பதாகவும் விவசாயிகள் குற்றம்சாட்டினர். எனவே, புளிக்கு அரசு ஆதரவு விலை நிர்ணயித்து, நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், போச்சம்பள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் புளியை நீண்ட காலம் பாதுகாக்கும் வசதி இல்லாததால், குறைந்த விலைக்கு உடனடியாக விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க, புளியை பதப்படுத்தி சேமிக்கும் வகையில் போச்சம்பள்ளி பகுதியில் குளிர் பதனக் கிடங்கு அமைத்து வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், புளி மதிப்புக் கூட்டு பொருட்கள் தயாரிப்பு, ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்குதல், விவசாயிகள் உற்பத்தியாளர் குழுக்கள் (திறிளி) மூலம் சந்தை வசதி ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், புளி விவசாயிகளின் வருமானம் உயர்வதுடன், மாவட்டத்தின் வேளாண் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## போதை பொருட்களை தடுக்க தவறிய திமுக அரசை கண்டித்து பாஜக சார்பில் ஆர்ப்பாட்டம்

### ராகுல் காந்தி உருவ பொம்மை எரிப்பு. காவல்துறையுடன் தள்ளு முள்ளு



தாம்பரம், பிப்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பாஜக இளைஞரணி சார்பில் திமுக அரசை கண்டித்து ஆர்பாட்டம் நடைபெற்றது. போதை பொருட்களை ஒழிக்காமல் தமிழக இளைஞர்களை சீரழிக்கும் திமுக அரசுக்கு எதிராக பாஜக இளைஞரணி மாவட்ட தலைவர் செல்வமுத்துகுமார் தலைமையில் நடைபெற்ற இதில் தேசிய ஜனநாயக கூட்ட ணியை சேர்ந்த ஏறாளமானோர் கலந்து கொண்டு திமுக அரசுக்கு எதிராகவும் போதை கலாச்சாரத்திற்கு எதிராகவும் பதாகைகளுடன் கோஷமிட்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் மத்திய அரசின் செயற்கை நுண்ணறிவு நிகழ்ச்சியில் அறை நிர்வாண போராட்டம் நடத்திய காங்கிரசை கண்டித்து ராகுல் காந்தியின் உருவ பொம்மையை காலால் மிதித்து எரித்தனர். இதனால் காவல் துறையினருக்கும் பாஜகவினருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏறபட்டது.



# நாராயண தீர்த்த சுவாமிகள் 280-வது ஆண்டு ஆராதனை விழா

தஞ்சாவூர், பிப்.23-

திருவையாறு அருகே மேல திருப்பூந்துருத்தியில் நாராயண தீர்த்த சுவாமிகளின்280 வது ஆண்டு ஆராதனை விழாவை யொட்டி 3 நாள் தரங்கஇசை விழா தொடங்கியது.

ஆந்திராவில் பிறந்துதமிழ் நாட்டிற்கு வந்து வரகூரில் நீண்டகாலம் தங்கி ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கினி ,சாண்டில்ய பக்தி சூத்ர வியாக்யானம், ஹரி பத்தி சூதார்ணவம், பாரிஜாதபஹரணம் முதலிய பக்தி நூல்களை இயற்றி கடைசி காலத்தில் திருவையாறு அருகே திருப்பூந்துருத்தியில் வந்து சில ஆண்டுகள் தங்கி ஜீவசமாதி யடைந்த மஹான் ஸ்ரீ நாராயணதீர்த்த சுவாமிகளின் 280 வது ஆராதனை விழா நடந்தது .

விழா கமிட்டி காரியதரிசி சென்னை நீலா தொடங்கி வைத்தார். முதல் நாள் நிகழ்ச்சியில் காலை வேதபாராயணங்களுடன் தரங்கஇசை விழா தொடங்கியது

முதல் நாள் நிகழ்ச்சியில் சென்னை பிரித்வி ஹரிஷ், நாகர்கோயில் பிரணதி, சென்னை அபிநயா, டாக்டர் பைரவி, மாம்பலம் சித்ரா, விஜயலெட்சுமி குழுவினர் பாட்டு, கல்யாணபுரம் வேதகிரி, தஞ்சாவூர் பிரவீன்ராஜ் மற்றும் குழுவினர் நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை நடந்தது.

இதில் சென்னை ஆடிட்டர் சந்திரசேகர், நிர்வாக குழு தலைவர் லெஷ்மி, விழாக்குழு கூட்டு காரியதரிசி திருப்பந்துருத்தி தவக்கல் பாட்ஷா, உறுப்பினர்கள் சென்னை ரவிச்சந்திரன், திருப்பந்துருத்தி ஆதிமூலம், பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிர்வாக குழு உறுப்பினர் அகரம்சந்திரசேகர் நன்றி கூறினார்.





# அனைத்து உலக தமிழ் ஆய்வு மாநாடு உலகத் தாய்மொழி நாள் விழா

தஞ்சாவூர், பிப்.23-

திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகம் , ஔவை அறக்கட்டளை, விஜிபி உலக தமிழ்ச் சங்கம், ஆஸ்திரேலியா தொல்காப்பிய மன்றம் சார்பில் 24 வது அனைத்து உலக தமிழ் ஆய்வு மாநாடு ,உலக தாய்மொழி நாள் விழா நடந்தது. ஔவை அறக்கட்டளை செயலாளர் முகில் வேந்தன் வரவேற்றார்.

தமிழ் ஐயா கல்விக் கழக மதிப்புயர் தலைவர் டாக்டர் நரேந்திரன் தலைமை வகித்தார்.

மாநாட்டு இயக்குனர் கலைவேந்தன் மாநாட்டின் நோக்கம் குறித்து பேசினார்.

எம்எல்ஏ துரை சந்திரசேகரன் உலக பெருந்தமிழர் விருது வழங்கி பேசினார்.

சமூக சேவகர் தம்பி ராஜா (எ ) முகமது , ரோட்டரி சங்க ஆளுநர் ஜெயகுமார் உள்ளிட்ட 20 பேருக்கு உலகப் பெருந்தமிழர் சிறப்பு விருது வழங்கப்பட்டது. தமிழிசை மன்ற பொதுச்செயலாளர் ரவிச்சந்திரன் , திமுக ஒன்றிய செயலாளர்கள் சிவசங்கரன் , கௌதமன், பனையூர் தண்டபாணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஔவைக்கோட்ட அறிஞர் பேரவைத் தலைமை அமைச்சர் மதிவாணன் தலைமையில் நூல் வெளியீட்டு விழா நடந்தது.

அந்தமான்அய்யாராஜு நூல்களை வெளியிட்டு பேசினார்.

யாழ்ப்பாணம் இந்திய அயலகப் பணி முன்னாள் துணைத்தூதர் நடராஜன் தொல்காப்பியர் மாமனி விருது வழங்கி பேசினார்.

ஔவைக்கோட்ட அறிஞர் பேரவை மூத்த அமைச்சர் புலவர் கந்தசாமி கருத்தரங்கை தொடங்கி வைத்தார். அரசர் கல்லூரி முன்னாள் முதல்வர் கலியபெருமாள் , திருமழபாடி தமிழ்ச் சங்க தலைவர் ஆறுமுகம் ஆகியோர் திருவுருவ படங்கள் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரிக்கான விருது உளுந்தூர் பேட்டை ஜவகர்லால் நேரு மகளிர் கல்லூரிக்கும்,

சிறந்த தமிழ்ச்சங்கத்திற்கான விருது இளங்காடு நற்றமிழ்ச் சங்கத்திற்கும் வழங்கப்பட்டது.

கோவை ஈசன் கலைக்கூடம் பாரதி கண்ணம்மா குழுவினர், மெலட்டூர் பாகவதமேளா பிரியம்வதா முரளி குழுவினரின் அப்பர் கயிலை காட்சி நாட்டிய நாடகம்நடந்தது.

ஓய்வூதியர் சங்க தலைவர் செல்வராசு நன்றி கூறினார். மாநாட்டில் தமிழ் மொழிக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் கரிகாலன் கட்டிய கல்லணையில் 216 அடி உயரமுள்ள தமிழன்னை சிலையினை தமிழக அரசு நிறுவ வேண்டும்,

அனைத்து அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், குழுமங்கள் போன்ற அனைத்திலும் தமிழ் மொழியில் பெயர் எழுத தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் , தமிழ்வழியில் புதியதாகத் தொடங்கும் தமிழ்ப்பள்ளிகளுக்குத் தமிழ்நாடு அரசு நிதிஉதவியும் அங்கீகார ஆணையும் உடனடியாக வழங்குவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட இணை செயலாளர் முடிச்சூர் டி.ஸ்ரீ பாஸ்கர் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா





தாம்பரம், பிப்.23-

செங்கல்பட்டு மாவட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றிய முடிச்சூர் ஊராட்சி அதிமுக சார்பில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி.மனோகரன் தலைமையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட இணை செயலாளர் முடிச்சூர் டி.ஸ்ரீ பாஸ்கர் அவர்களின் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜே ந்திரன் கலந்து கொண்டு அம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கு படத்திற்கு மரியாதை செலுத்தி பின்னர் 250க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு சில்வர் பாத்திரம் புடவை உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மகளிர் அணி மாவட்ட பொருளாளர் லலிதா சுரேந்திரன், பரங்கிமலை மேற்கு ஒன்றியம் கழகத் துணைச் செயலாளர் கற்பகம் சீனிவாசன், பரங்கிமலை மேற்கு ஒன்றிய மகளிர் அணி துணை செயலாளர் அமுதா, பரங்கிமலை மேற்கு ஒன்றிய இலக்கிய அணி செயலாளர் தவமணி, பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் மூர்த்தி, நாராயணன், கஜேந்திரன், பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் அணி துணைத்தலைவர் குரங்கு பாபு, ராஜேந்திரன், பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் ஹரிகிருஷ்ணன், பரங்கிமலை மேற்கு ஒன்றியம் எம்ஜிஆர் மன்ற துணைத் தலைவர் செந்தில் குமார், பரங்கிமலை மேற்கு ஒன்றிய அம்மா பேரவை இணைச் செயலாளர் கார்த்திக், சாய் ஜமுனா, தேவி, கமலி, பாஜக பொருளாதார பிரிவு மாவட்டச் செயலாளர் முடிச்சூர் வெங்கடேசன், செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் விளையாட்டு பிரிவு மாவட்ட துணைத் தலைவர் சுபத்ரா, பெருங்களத்தூர் முடிச்சூர் மண்டல இளைஞர் அணி மணிகண்டன் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.





■ புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி, கறம்பக்குடி மேற்கு ஒன்றியம், மாங்கோட்டை ஸ்ரீகாளி அம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற 7ம் ஆண்டு வடமாடு ஜல்லிக்கட்டு போட்டியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் டாக்டர் RV.பழனிவேல் அவர்கள் கலந்து கொண்டு ஜல்லிக்கட்டு காளைக்கு மரியாதை செய்து போட்டியை துவக்கிவைத்து, வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

# வெள்ளகோவில் - காங்கேயம் பகுதியில் அசோக் லேலண்ட் வாடிக்கையாளர் சந்திப்பு விழா: புதிய இலகுரக வாகனங்கள் அறிமுகம்; வணிகர்களின் வரவேற்பு



திருப்பூர், பிப்.23-

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் - காங்கேயம் பகுதிக்கான வாடிக்கையாளர் சந்திப்பு விழா Ashok Leyland நிறுவனத்தின் சார்பில் கோவை- திருச்சி சாலையில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நிறுவனத்தின் ஏரியா சேல்ஸ் மேலாளர்கள் ராஜ்குமார் மற்றும் ஜெகதீஷ் தலைமை வகித்தனர். நிர்வாக இயக்குநர் சங்கர், ஏஜிஎம் செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் இலகுரக வாகனப் பிரிவில் புதிய “படா தோஸ்த் ஐ6” (Bada Dost i6) வாகனம் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறிய வாகனமான “சாத்தி” முதல் பெரிய அளவிலான “பார்ட்னர்” வரை, எஸ்.சி.வி (SCV) பிரிவில் பல்வேறு வாகனங்கள் வழங்கப்படுகின்றன என்று நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது நிறுவனத்தின் “Dost+” (தோஸ்த் பிளஸ்), “Bada Dost i5” (படா தோஸ்த் i5) மற்றும் “Saathi” (சாத்தி) உள்ளிட்ட பல இலகுரக வாகனங்கள் சந்தையில் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. இவ்வாகனங்கள் வெவ்வேறு சரக்கு தேவைகள் மற்றும் வணிகப் பயன்பாடுகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதாக விளக்கமளிக்கப்பட்டது.

திருப்பூர் பகுதி மேலாளர் செந்தில்குமார், துணை மேலாளர்கள் பெரோஸ், தினேஷ், ஜீவானந்தம், ஜான் அலெக்சாண்டர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். காங்கேயம், வெள்ளகோவில் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து வந்த வாடிக்கையாளர்கள் புதிய வாகனங்களை பார்வையிட்டு தங்கள் கருத்துகளை பகிர்ந்தனர். தாராபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து வந்திருந்த வாடிக்கையாளர்களிடமும் நிறுவன ஊழியர்கள் நேரடியாக கருத்துக்களை கேட்டறிந்தனர்.

நிகழ்ச்சி நிறைவில் அனைவருக்கும் விருந்து வழங்கப்பட்டது. சிறந்த வாடிக்கையாளர்களுக்கு பாராட்டு மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் ஏராளமான நிறுவன ஊழியர்கள், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் திமுக அலுவலகம் திறப்பு விழா

கிருஷ்ணகிரி, பிப்.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில், கே.எஸ்.ஜி. சூப்பர் மார்க்கெட் அருகில் திமுக கட்சி அலுவலகம் இன்று காலை திறந்து வைக்கப்பட்டது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்எல்ஏ குத்துவிளக்கு ஏற்றி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி நிர்வாகி வெங்கடேசன், மாவட்ட பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாநில நிர்வாகி இசை,பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், நகர செயலாளர் வெங்கட்டப்பன், ஒன்றிய செயலாளர்கள் காந்தி, அறிஞர், வி.ஜி.ராஜேந்திரன், சாந்தமூர்த்தி , இளையராஜா, கிருஷ்ணகிரி நகர செயலாளர் அஸ்லாம்,மகளிர் அணி லட்சுமிதேவி, பொதுக்குழு உறுப்பினர் பாலன், கவுன்சிலர்கள் கே எஸ் ஜி கார்த்திகேயன், கார்த்திகேயன், துணைத்தலைவர் வசந்தகுமார்,வடிவேல், ஆகாஷ், துணைச் செயலாளர் இ டி மகேந்திரன், ரமேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புதிய அலுவலகம் கட்சி பணிகளை வலுப்படுத்தும் வகையில் செயல்படும் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# கலைஞர்கள் மற்றும் இளைஞர்களுக்காக சிறப்பு மூங்கில் தொழில்நுட்பப் பயிற்சி மையம் நிறுவப்படும் கலெக்டர் தகவல்



கிருஷ்ணகிரி, பிப்.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் காரப்பட்டு பகுதியில் கலைஞர்கள் மற்றும் இளைஞர் களுக்காக ஒரு சிறப்பு மூங்கில் தொழில்நுட்பப் பயிற்சி மையம் நிறுவப்பட உள்ளதாக கலெக்டர் தெரிவித்தார்.

தொழில்நுட்பப் பயிற்சி

கிருஷ்ணகிரி மாவட்டம் காரப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள மை பாண்டா உட்ஸ் நிறுவனத்தின் மூங்கில் வனம் என்ற மாதிரி மூங்கில் பண்ணையை மாவட்ட கலெக்டர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து பண்ணையில் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கிளன் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட மூங்கில் பல் துலக்கி, மூங்கில் சீப்பு, மூங்கில் ஃபிளாஸ்க், மூங்கில் காபி கோப்பை போனற் வாழ்வியல் பொருட்கள் மற்றும் மூங்கில் இழை சார்ந்த துண்டுகள், டீ-சர்ட்டுகள், சாக்ஸ் உள்ளிட்ட ஜவுளிப் புதுமைகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இது குறித்து கலெக்டர் கூறுகையில், மூங்கில் பதப்படுத்துதல் மற்றும் உற்பத்தியை நவீனமயமாக்க தரமான மூங்கில் இயந்திரங்களை நிறுவுவதற்கான திட்டம் குறித்து மூங்கில் வனம் குழுவினருக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் வழியாக இயந்திரங்கள், மூங்கிலை மதிப்புமிக்க பொருட்களாக மாற்றும் உற்பத்தி திறனை பல மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இததோடு இணைந்து இப்பகுதியில் உள்ள கலைஞர்கள் மற்றும் இளைஞர்களுக்காக ஒரு சிறப்பு மூங்கில் தொழில்நுட்பப் பயிற்சி மையம் நிறுவப்பட உள்ளது. இந்த பயிற்சி மையம், மூங்கில் சேகரிப்பு, பதப்படுத்துதல், தயாரிப்பு வடிவமைப்பு, தர மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய அனைதது நிலைகளிலும் கட்டமைப்பக்கப்பட பயிற்சியை வழங்கும். இதன் மூலம் இப்பகுதியில் நூற்றுக்கணக்கான கலை ஞர்களுக்கு நிலையான வேலைவாய்ப்பு உருவாக் கப்படும்.

மூங்கில் அறிவு மையம்

இங்கு வெறும் பொருட்களை மட்டும் உருவாக் கவில்லை. ஒரு முழுமையான அறிவுத் தளத்தை உருவாக்கப்படுகிறது. தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் மூங்கிலின் சாகுபடி, பதப்படுத்துதல், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய அனைத்து அறிவையும் இந்த ஒரே இடத்தில் இருந்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டு வருகிறது. நடுப்பட்டி கிராமம் வருங்காலத்தில் தெற்காசியாவின் மூங்கில் அறிவு மையமாக உருவெடுக்கும். மூங்கில் சார்ந்த பொருட்களுக்கான நிறுவனத்தின் பிரத்யேக டிஜிட்டல் சந்தையான Moongilmart.com கலைஞர்கள், தச்சர்கள் மற்றும் விவசாயிகள் குழுக்களுக்கு டிஜிட்டல் கடை வசதி, தளவாட ஆதரவு மற்றும் தேசிய அளவிலான விநியோகம் மூலம் பரந்த சந்தைகளை அணுக உதவுகிறது. 2030ம் ஆண்டுக்குள் 3,000 கலைஞர்களை மேம்படுத் துவதையும், 5,000 டன் பிளாஸ்டிக் கழிவுகளை ஈடுசெய்வதையும் இலக்காகக் கொண்டு, நிலையான வாழ்வியலில் இந்தி யாவின் மிகவும் நம்பகமான நிறுவனங்களில் ஒன்றாக உருவெடுக்க உறுதியுடன் செயலாற்றி வருகிறது என்றார்.இந்த ஆய்வின் போது, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வெங்கடேசன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஏஞ்சலின் பொன்ராணி, தாசில்தார் ராஜலட்சுமி, மூங்கில் வன நிறுவனர் தேன்மொழி ராம்தினேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



# திருமயம் தொகுதியில் விருப்பமனுவளித்த திமுக ஆலவயல் முரளி சுப்பையா

திருமயம், பிப்.23-

பொதுத் தேர்தலுக்கான பணிகளை தமிழ்நாடு அரசியல் கட்சியினர் மேற்கொண்டுவரும் வேளையில், திமுக தலைமையானது சீட் கேட்டு விருப்ப மனுக்களை வழங்கலாம் என்று அறிவித்ததையடுத்து, திமுக நிர்வாகிகள் ஆங்காங்கே விருப்ப மனுக்களை அளித்த வண்ணம் உள்ளனர்.

அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதிக்கு தொகுதி ஐடி விங் மேனாள் பொறுப்பாளரும், 1989 முதல் 1991 வரையிலான காலகட்டத்தின் திருமயம் சட்டமன்ற தொகுதியின் மேனாள் உறுப்பினரான ஆலவயல் சுப்பையாவின் மகனுமான ஆலவயல் முரளி சுப்பையா விருப்பமனுவினை அளித்தார்.

ஏற்கனவே இரண்டு முறை சீட் கேட்டு விருப்பமனுக்களை தலைமைக்கு அளித்துள்ள நிலையில், 2016 மற்றும் 2021 ஆகிய இரண்டு முறையும், தொடர்ந்து இதோடு மூன்றாவது முறையாக விருப்பமனுவளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச்செயலாளர் பச்சேரி வள்ளல் சி.ஆர்.ஸ். பிறந்தநாள் விழா

சிவகங்கை, பிப்.23-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் வேம்பத்தூர் அருகேயுள்ள பச்சேரி கிராமத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் சி. ஆர். எஸ். என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் சி. ஆர். சுந்தரராஜன் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு காங்கிரஸ், திமுக உள்ளிட்ட அனைத்துக் கட்சி பிரமுகர்கள் , சமுதாயப் பெரியவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



பச்சேரி சி. ரெத்தினம்பிள்ளை சரஸ்வதி அம்மாள் ஆகியோரது மூத்த மகனும் இப்பகுதியில் காங்கிரஸ் பேரியக்கத்தை வளர்த்து வருபவருமான சி. ஆர். சுந்தரராஜன் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சுற்றுவட்டார கிராமப் பொதுமக்கள் மற்றும் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களுக்கும் மணக்க மணக்க அசைவ மட்டன் பிரியாணி வழங்கப்பட்டது.

பொதுவாகவே சிவகங்கை மாவட்டம் முழுவதும் உள்ள தேவாலயங்கள் , இந்து கோவில்களின் குடமுழுக்கு , அன்னதானம் , கல்வி உதவி என பல்வேறு வகையான உதவிகளை விளம்பரமே இல்லாமல் செய்து வருகிற சி. ஆர். சுந்தரராஜன் அவர்களை ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# சிவகங்கையில் ஆட்டோ தொழிலாளர்கள் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்: பிப்ரவரி 24ல் திரள அழைப்பு

சிவகங்கை, பிப்.23-

ஆட்டோ தொழிலாளர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை நிறைவேற்ற மறுக்கும் தமிழக அரசைக் கண்டித்து, சிஐடியு (CITU) சிவகங்கை மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்கம் சார்பில் வரும் பிப்ரவரி 24ம் தேதி பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

போராட்ட விவரம்:

* நாள்: 24.02.2026 (செவ்வாய்க்கிழமை)

* நேரம்: காலை 10:00 மணி

* இடம்: சிவகங்கை அரண்மனை வாசல் முன்பு

முக்கியக் கோரிக்கைகள்:

இந்த ஆர்ப்பாட்டத்தில் பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட உள்ளன:

* சிவகங்கை மாவட்டத்தில் மினி பேருந்துகளை முறைப்படுத்த வேண்டும். அரசே மினி பேருந்துகளை இயக்க வேண்டும்.

* பைக் டாக்ஸி செயலிகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும்.

* கடந்த 13 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருக்கும் மீட்டர் கட்டணத்தை தற்போதைய விலைவாசிக்கு ஏற்ப உடனடியாக உயர்த்தி அறிவிக்க வேண்டும்.

* ஆட்டோக்களுக்கென அரசே தனிச் செயலியை (App) உருவாக்கித் தர வேண்டும்.

* அநியாயமான எஃப்சி (FC) கட்டண உயர்வைக் கைவிட வேண்டும் மற்றும் ஆன்லைன் அபராத முறையைத் திரும்பப் பெற வேண்டும்.

தலைமை மற்றும் பங்கேற்பாளர்கள்:

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆட்டோ சங்க மாவட்டத் தலைவர் M. கருப்பு தலைமை தாங்குகிறார். மாவட்டப் பொருளாளர் S.குமாரவேல் முன்னிலை வகிக்கிறார்.

கண்டன உரையாற்றுபவர்கள்:


* S. கண்ணன் (சம்மேளன துணைத் தலைவர்)

* A. விஜயகுமார் (ஆட்டோ மாவட்ட பொதுச் செயலாளர்)

* A. சேதுராமன் (CITU மாவட்ட செயலாளர்)

* R. உமாநாத் (CITU மாவட்ட தலைவர்)

தங்கள் வாழ்வாதார உரிமைகளை வென்றெடுக்க, ஆட்டோ தொழிலாளர்கள் அனைவரும் சீருடையுடன் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்கம் (CITU) அழைப்பு விடுத்துள்ளது.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் மோர்ஸ்கார்டன் பகுதியில் அமைந்துள்ள ஓம் சாந்தி நிலையத்தில், 90 வது திரிமூர்த்தி சிவஜெயந்தி விழா நடைபெற்றது. விழாவினை குன்னூர் நகர்மன்ற தலைவர் சுசீலா, ஓம்சாந்தி கொடியினை ஏற்றி, குத்துவிளக்கேற்றி, சிவஜெயந்தி விழாவினை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் குன்னூர் நகர்மன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், மற்றும் ஓம் சாந்தி நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.





# விளையாட்டுப் போட்டிகளில் தேசிய அளவில் சாதனை படைத்த சுவஸ்ரீயை பாராட்டும் நிகழ்வில் அமைச்சர் முன்னிலையில் 20 பா.ம.க வினர் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்

திண்டுக்கல். பிப் 23-

திண்டுக்கல், திருநகரைச் சேர்ந்த மாணவி சுவஸ்ரீ வூசு பயிற்சியாளர் ஜாக்கி சங்கர் அவர்களிடம் பயிற்சி பெற்று தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார். இதனை தமிழக முதல்வர் அவர்கள் பாராட்டி அரசு பணி நியமன ஆணையை வழங்கினார். அதனைத் தொடர்ந்து

திண்டுக்கல் மாவட்ட கருவூலத்தில் பணி நியமன ஆணை பெற்ற சுவஸ்ரீ ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் நியமன ஆணையை காண்பித்து வாழ்த்து பெற்றார். அப்போது மாணவியை வாழ்த்தி பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புமிகு திட்டங்களால் விளையாட்டுத்துறையில் சாதனை படைக்கும் பெண்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. இதன் மூலம் கிராமப்புற பெண்கள் விளையாட்டுத்துறையில் மாபெரும் சாதனை படைப்பார்கள் என்றார். இந்த நிகழ்ச்சியின்போது பயிற்சியாளர் ஜாக்கிசங்கர் மற்றும் உதவி பயிற்சியாளர் யஷ்வந்த் சஞ்சய் ஆகியோர் உடனிருந்தனர். அதன்பின்னர் வீரக்கல் ஊராட்சி வடக்கு மேட்டுப்பட்டியைச் சேர்ந்த பா.ம.கவினர் 20 பேர் அக்கட்சியிலிருந்து விலகி அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், ஜாதி, மத, இன, கட்சி வேறுபாடின்றி எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையில் செயல்படுவதால், ஆத்தூர் தொகுதியில் மாற்று கட்சியினர் திமுகவில் இணையும் நிலை உருவாகியுள்ளது என்றார். நிகழ்ச்சியின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், இன்பராஜ், முருகேசன், மணி, மாநகர பொருளாளர் மீடியா சரவணன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் நந்தகோபால், ரேகா அய்யப்பன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன். பஞ்சம்பட்டி மணி, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, சுமதி கணேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ரமேஷ், காங்கேயன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் செல்வம், அரவிந்தன் மற்றும் கரிசல்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், பால்ராஜ், கரிசல்பட்டி ஆசான் அமலஇளவரசு திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப் மற்றும் இளைஞரணியினர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக கட்டுரைப் போட்டி

சிவகங்கை, பிப்.23-

ஒளிச் சிதறல் பற்றிய தனது கண்டறிதலை தனது ஆய்வு மூலம் உலகிற்கு சர் சி வி ராமன் அறிவித்த தினமான பிப்ரவரி 28 தேசிய அறிவியல் தினமாக இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதையொட்டி பள்ளி மற்றும் கல்லூரிகளில் அறிவியல் கண்காட்சிகள், வினாடி வினாப் போட்டிகள், கருத்தரங்குகள், அறிவியல் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை மாவட்டம் சார்பாக இந்த ஆண்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் விடுத்துள்ள செய்தியில் அறிவியல் மனப்பான்மையை ஏற்படுத்திடும் வண்ணம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்த ஆண்டு கட்டுரைப் போட்டி நடத்தப்பட உள்ளது. ஆசிரியர்கள் “எதிர்கால அறிவியல்” என்ற தலைப்பிலும் மாணவர்கள் “இந்தியாவும் அறிவியலும்“ என்ற தலைப்பிலும் 8 பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரையை எழுதலாம். மார்ச் 10 (செவ்வாய்க்கிழமை), 2026 க்குள் ம.பிரபு, மாவட்ட செயலாளர், 4, விஜெயம் இல்லம், வைகை நதி தெரு, கல்லல் 630305, சிவகங்கை மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். மேலும் விவரங்களுக்கு 9944089151 என்று எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம்.



# நீலகிரி மாவட்ட நடுவட்டம் பகுதியில் இலவச மருத்துவ முகாம்

நீலகிரி, பிப்.23-

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே நடுவட்டதில் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு, ஆல் தி சில்ரன் ஆகியன சார்பில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார்.

ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் முன்னிலை வகித்தார்


செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் ஜெய்னப் பாத்திலா தலைமையில் மருந்தாளுணர் நவீன், செவிலியர் சுமதி நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு, பொது மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டனர். தேவையுள்ளவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது.

50க்கும் மேற்பட்டவர்கள் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

# வீட்டுவரி செலுத்த பெயர் மாற்றம் செய்துதர வலியுறுத்தி பேரூர் நிர்வாகத்திற்கு உத்தரவிடக்கோரி முதல்வரின் தனிபிரிவுக்கு கோரிக்கை மனு

திருவள்ளூர், பிப்.23-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி நாகலாபுரம் சாலை எட்டிக்குளம் தெருவில் வசித்து வருபவர் ஜெயக்குமார் த/பெ. கோவிந்தன் எண்பரது தாயார் விமலா எண்பவருக்கு அரசு 29.12.2000ம் ஆண்டு இலவச வீட்டுமனை பட்டா வழங்கியதாகவும் அந்த மனையில் வீடுகட்டி இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது இந்த நிலையில் கோவிந்தன் தனது தகப்பனார் 11.03.1978ல் இறந்துவிட்டதாகவும் தனது தாயார் வெங்கடாதிரி எண்பவரை அரசு பதிவுபடி இரண்டாவது திருமணம் செய்து கொள்ளாமல் தாங்களகவே திருமணம் செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.



இந்த நிலையில் விமலா என்ற தனது தாயார் 10.02.2010 ம் ஆண்டு இறந்து விட்டதாகவும 2010 முதல் 2025வரை தனது தாயார் விமலா எண்பவர் பெயரிலே வீட்டு வரி செலுத்தி வருவதாகவும் தனது தாயார் இறப்புச்சான்றில் கணவர் வெங்கடதிரி என்ற பெயர் உள்ளதால் அந்த வீட்டுவரியை தனது பெயரான ஜெயக்குமார் என்ற எனது பெயருக்கு இனிவரும் காலங்களில் வீட்டுவரி செலுத்த எனது தாயார் இறப்பு சான்றில் உள்ள வெங்கடாதிரி என்ற பெயரை திருத்தம் செய்து தனது தகப்பனாரான கோவிந்தன் என்ற பெயரை பதிவுசெய்து தனது பெயரில் வீட்டு வரிசெலுத்த ஏதுவாக பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஆனையிட வேண்டி தமிழக முதல்வரின் தனி பிரிவுக்கு கோரிக்கை மனு அளித்துள்ளதாக கூறப்படுகிறது பேரூராட்சி நிர்வாகதம் முதல்வரின் தனிபிரிவு கடிதத்திற்கு செவிசாய்க்குமா????? அப்பகுதி சமூகஆர்வலர்கள் எதிர்பார்பு



# தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 33வது வட்டம் சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தாம்பரம், பிப்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 33வது வட்டம் சார்பில் மாமன்ற உறுப்பினர் சி.சுரேஷ் அவர்கள் தலைமையில் வட்ட செயலாளர் மு.வினோத் அவர்கள் வரவேற்புரையில், கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா அவர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, நலத்திட்ட உதவிகள் வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் 4வது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காம ராஜ், தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல் மணி, ஜி.கருணாகர பாண்டியன், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161